1978 மார்ச் 16]

திரு. அ.க. அரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில், விவசாயத் திற்கு நிலத்தடி நீரை எல்லாம் பயன்படுத்திவிட்டதால் கிணறு களில் வெகு ஆழத்தில் கூட தண்ணீர் கிடைப்பது இல்லை. அங்கு விவசாயத்திற்கு தண்ணீர் பற்றாக்குறை இருந்து கொண் டிருப்பதால்—இதை தவிர்க்க—ஆந்திராவிலிருந்து இப்போது சென்னை மாநகருக்கு தண்ணீர் கொண்டு வருவதற்கு திட்டமிருப்ப தாக பேசப்படுகிறது. அப்படி ஆந்திராவிலிருந்து தண்ணீர் கொண்டு வரும்போது இந்தத் தண்ணீரை பாலாற்று வழியாக கொண்டு வந்தால், அங்கு நிலத்தடி தண்ணீர் ஏற்பட்டு கிணறு களில் தண்ணீர் நிறைவதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே அதற்கு ஏதாவது ஏற்பாடு செய்ய உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை மிகவும் ஆபத் தான யோசனை. அப்படி பாலாற்றில் அந்தத் தண்ணீரை கொண்டு வந்தால், அந்தத் தண்ணீர் சென்னைக்கு வந்து சேராது, பாலாற்று மணலிலேயே எல்லாத் தண்ணீரும் போய்விடும்.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். உறுப்பினர்களாகிய நாங்கள் கேள்விகளை கேட்கிறோம், அமைச்சர்கள் தங்களுடைய அதிகாரிகள் கொடுக்கும் தகவல்களை வைத்து பதில்களை தருகின்றார்கள். நாங்கள் அந்த பதில்களி லிருந்து கிடைக்கின்ற விஷயங்களிலிருந்து துருவித் துருவி பல துணைக் கேள்விகளை கேட்கிறோம். அப்படி கேட்பதிலிருக்கின்ற விஷயங்களை மீண்டும் கவனத்தில் எடுத்து எங்களுக்கு பதில் தெரி விப்பதற்கு இங்கே ஒரு அதிகாரி கூட கேள்வி நேரத்தில் வர வில்லையே, அதற்கு என்ன காரணம் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் அவர் கள் இங்கே நீண்ட காலம் இருந்திருக்கிறீர்கள். கேள்வி நேரத் தின் போது, அதிகாரிகள் இங்கு இருக்க வேண்டும் என்று கட் டாயப்படுத்த முடியாது, அப்படி கட்டாயமும் இல்லை. இதில் ஒழுங்குப் பிரச்னை ஒன்றும் இல்லை.

வேட்டைக்காரனிருப்பு கிராமத்தில் இறைவைப் பாசனம்.

*590 வினா—திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) நாகை தொகுதி, வேட்டைக்காரனிருப்பு கிராமத்தில் உள்ள மானாவாரி நிலங்களுக்கு இறைவைப் பாசனம் அளிப்பதற் கான திட்டம் ஒன்று 1977 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 25 ஆம்

[1978 மார்ச் 16

தேதியில் காவேரி வளர்ச்சிப் பணிகள் வட்டம், தனி மேற் பார்வை பொறியாளரால் பாசன தலைமை பொறியாளருக்கு அனுப்பப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :—(அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் சிக்கனமில்லாத காரணத்தாலும்' போதிய அளவு நீர் கிடைப்பது நிச்சயமில்லாததாலும் கைவிடப் பட்டது.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இத்திட்டம் கைவிடப்பட்டிருப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் சொல்லு கிறார்கள். இத்திட்டம் கைவிடப்பட்டதற்கு காரணம் அன்-எக்னுமிக்காக அதாவது சிக்கனமாக இல்லை என்று சொல்லு கிறார்கள். இந்தப் பகுதி வறட்சியான பகுதி. இப்படிப்பட்ட திட்டங்கள் இருந்தால்தான் அங்குள்ள மக்கள் பலன் பெற முடியும். 1950-ம் ஆண்டிலிருந்தே இது பற்றி சொல்லப்பட்டு வந்தது. 1954-ல் மாணிக்கவேலு நாயக்கர் தலைமையில் பிரம் மாண்டமான ஊர்வலம் எல்லாம் வந்துதான் இப்படிப்பட்ட திட்டம் நிறைவேற்றப்படும் என்று உறுதி மொழி தரப்பட்டது. அதற்குப் பின்னால் இப்போது 18 ஆண்டுகளுக்குப் பின்னால் திட் டம் கைவிடப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறபோது இப்படி மானாவாரி பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பயன் அடையக் கூடிய இப்படிப்பட்ட திட்டங்கள் கைவிடப்பட்டது என்று சொல்லிவிட்டால், எப்படி அங்குள்ள விவசாயிகள் வாழ் வது, ஆகவே இதற்கு மாற்றுத் திட்டம் ஏதாவது அரசாங்கத் தினிடத்தில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இத்திட்டம் 1974-75-ம் ஆண்டில் 10.35 லட்சம் ரூபாய் அளவில் மதிப்பீடு செய்யப்பட்டு, 653 ஏக்கர் நிலத்திற்கு பயன்படும் என்ற முறையில் எதிர்பார்க்கப்பட்டது. பின்னால் இத்திட்டம் பற்றி ஆராயப்பட்டபோது, இத்திட்டத்தினால் பயன்படக்கூடிய உத்தேச ஆயக்கட்டு நிலங்களுக்கு போதுமான உபரித் தண்ணீர் ஆரம்ப சாகுபடி காலமாகிய ஆகஸ்டு, செப்டம்பர் காலங்களில் கிடைக்காது என்று தெரியவந்தது. மேலும் இத்திட்டம் எதிர்பார்க்கும் அளவுக்கு சிக்கனமாகவும் இருக்கவில்லை. சிக்கன மாக இல்லை என்பது மட்டும் முக்கிய காரணமல்ல, போதுமான நீர் கிடைக்காது என்றுதான் தகவல் தந்திருக்கிறார்கள். அது தான் பிரச்சினைக்குரிய விஷயம்.

1978 மார்ச் 16]

திரு. ரா. உமாநாத் : நான் இதுபற்றி வெரிஃபை பண்ணின போது, போதிய நீர் கிடைக்காது என்று உங்களுக்கு சொல்லப் படுகின்ற தகவல், டிபார்ட்மென்ட் கொடுத்திருப்பது சுத்தமாக சரி இல்லை, இது அன்-எக்கனமிக்காக இல்லை என்பது தான் மெயினாக சொன்னது. இப்படிப்பட்ட மானாவாரி பிரதேசங் களில் இப்படிப்பட்ட திட்டங்களை கொண்டு வரும்போது, அது எக்னமிக்-காக இருக்குமா அல்லது அன்-எக்னமிக்காக இருக்குமா என்று பார்க்காமல் ஒட்டு மொத்தமாக நாட்டு நலனைக் கருதி, மக்களுடைய நலனைக் கருதி, நஷ்டமாக இருந்தாலும் இப்படிப் பட்ட திட்டங்களை மேற்கொள்வது தான் சரி. அந்த அடிப்படை யில் இதையும் மேற்கொள்ளவேண்டும் என்பது எனது வேண்டு கோள். அந்த அடிப்படையில் இது செய்யப்படுமா என்பது தான் எனது கேள்வி.

THE HON. THIRU S. RAMACHANDRAN: Availability of continuous minimum supply cannot be established during the earlier months of the irrigation season namely, August and September. எனவே நீர் பற்றாக் குறை என்பதும் உண்மை தான். மேலும் திட்டங்களை ஆய்வு செய்வதில் தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்த வரை டன் ஒன்றுக்கு 2,500 ரூபாய் என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அதாவது ஒரு டன உணவு உற்பத்தி செய்வதற்கு 2,500 ரூபாய் வரை செலவு செய்யலாம் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. மற்ற மாவட்டங்களை எடுத்துக் கொண்டால், தர்மபுரி, சேலம், கோயமுத்தூர் மாவட்டங்களுக்கு 3,500 ரூபாய் செலவு செய்யலாம் என்றும், இது தவிர மற்ற மாவட்டங்களுக்கு 3,000 ரூபாய் என்றும் அளவு வைககப்பட் டிருக்கிறது இந்த 'யார்ட்-ஸ்டிக்கை' வேண்டுமென்றால் மறு பரிசீலனை செய்யலாம்.

[முற்பகல் 9-20]

Supply of Power at Concessional Rates to Poultry Farms

*591 Q. THIRU R. E. CHANDRAN JEYAPAL: Will the Hon. the Minister for Public Works be pleased to state whereas poultry farms in other states enjoy the benefits of concessional tariff of 12 to 15 per cent per unit of electricity, the reason for charging the Tamil Nadu Poultry Farms at a higher tariff of about 70 paise per unit normally and about Rs. 1·50 per unit under power cut?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கோழிப் பண்ணையில் கோழிக் குஞ்சுகளுக்குத் தேவையான உடற் சூட்டிற்கு தனி மீட்டர் அமைத்து பயன்படுத்தும் மின் விளக்குகளுக்கு யூனிட் ஒன்றுக்கு 31 முதல் 34 காசு வரை மின் கட்டணம் விதிக்கப்படுகிறது. மின் உற்பத்தி விலையோடு ஒப்பிடும்போது இது சலுகைக் கட்டணமே ஆகும்.